ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

दुष्टा भार्या शठं मित्रं भृत्यश्चोत्तरदायकः ।
ससर्पे च गृहे वासः मृत्युरेव न संशयः ॥

தன் அபிப்பிராயத்தையனுஸரிக்காத துஷ்டையான பார்யையைப் பெறுவதும், ஹிதாஹிதத்தை யறியும் சக்தியற்ற மூர்க்கனுடைய மித்திரனுடனிருப்பதும், எந்த விஷயத்தைச் சொன்னாலும் அதைப் பொறுமையுடன் வாங்கிக்கொள்ளாமல் எதிர்த்து வாயாடும் வேலைக்காரனையடைவதும், ஸர்ப்பத்தோடுகூடிய வீட்டில் வஸிப்பதும், இயமனோடு வஸிப்பதற் கொப்பாகும்.

இல்லற தர்மத்தை விதிவழுவாது நடத்த வேண்டுமெனக் கருதி முறைப்படி கிரகிக்கப்படும் பார்யையானவள் தன் பதியின் இஷ்டப்படி அந்த தர்மங்களையனுஷ்டிக்க அனுகூலமாக இல்லாமல் விபரீதமா யிருப்பாளாகில் அவளுடன் வாழ்வது மிருத்யுவுடன் இருப்பதற்குச் சமமாகும். இக்கருத்தையே

यदि सा विपरीता स्यात् नरकादतिरिच्यते ।

தர்மகார்யத்தை யுத்தேசித்து விவாஹம் செய்யப்படும் ஸ்திரீயானவள் அதற்கு விபரீதமாயிருப்பாளாகில், அவளால் நரக துக்கானுபவத்தைக் காட்டிலும் அதிக துக்கானுபவம் ஏற்படும் என்று மனு கூறியிருக்கிறார். सन्निमत्त्वमापदि सुखे च समक्रियं यत् என்றுகூறியபடி நமக்கு ஆபத்துநேர்ந்தாலும், சந்தோஷம்நேர்ந்தாலும், வேற்றுமை பாராட்டாமல் சரியாயிருப்பவன் சிறந்த மித்திரன். அவ்விதமின்றி தனக்குத் தோன்றியபடியெல்லாம் காரியங்களை நடத்தும் மித்திரனால் அதிக கஷ்டமேயுண்டாகும். தன் எஜமானன் என்கிற பயம் பக்தி யில்லாமல் எதிர்த்துப்பேசும் வேலைக்காரனாலும் துன்பமே விளையும். ஆகையால், பத்நீ, மித்திரன், பிருத்யன் இம் மூவர்களும் தாங்களிருக்கவேண்டிய முறை தவறுமலிருப்பார்களாகில், அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் சுகமுண்டாகும். இல்லாவிடில் அதிக கஷ்டமேற்படுமென்று தெரிவிக்கிறார்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

தீர்த்ததானம் மிகச் சிறந்தது.

(36-வது பக்கத்தொடர்ச்சி)

இவ்விதம் அதிக பக்திசிரத்தையுடன் தீர்த்ததானமென்கிற இந்த தர்மத்தைத் தவறாமல் நடத்திவருவதால் அவ் வேதியருக்குச் சிறந்த கீர்த்தி ஏற்பட்டு எங்கும் பரவிவிட்டது. இதையறிந்த அமரேசன் இந்த தர்மத்தை நடைபெறாமல் செய்ய வேண்டுமென்று கருதி மழையில்லாமல் செய்துவிட்டால் தீர்த்தம் கிடைக்காமல் நின்றுவிடும் என்று தீர்மானித்துப் பல ஆண்டுகள் மாரி பொழியாமலிருக்கும்படி மேகங்களைத் தடுத்துவிட்டார்.

அவ்விதமே மழையில்லாமல்போகவே சுசிலன் என்கிற பூசுரன் மிகவும் கவலைகொண்டு தன்தர்மம் சரியேநடைபெறவேண்டி மறுபடியும் ஸ்ரீமந்நாராயணனைப் போற்றினார். பக்தரக்ஷகரான பகவான் அவரது பிரார்த்தனைக்கிணங்கி, அவர் தர்மத்திற்கு உபயோகமாயிருக்கும் குளங்களிலும், கிணறுகளிலும் பூர்ணமாய் தீர்த்தமிருக்கும்படி அனுக்கிரகித்தார் என்று நிரூபித்து, மறுபடியும் பரதசிரேஷ்டரான ஹே தர்மபுத்திரரே! கேளுமென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் செப்புகின்றார்.

तं धर्ममपहर्तुं वै न शशाक स वृत्रहा ॥

வேதியரால் செய்யப்பட்ட தீர்த்ததானமென்கிற அந்த தர்மத்தை நடைபெறாமல் செய்வதற்கு இந்திரனால் முடியவில்லை.

तथा हि मम भृत्यस्य कामं लोकेऽप्यपोहितुम् ।
कस्समर्थो महाराज विष्णुभक्तस्य तस्य वै ॥

ஹே மஹாராஜ! விஷ்ணுவான என்னுடைய பக்தனும், ப்ருத்தியனுமிருப்பவனுக்கு நற்காரியங்களிலேற்படும் இச்சையைத் தடுப்பதற்கு பூலோகத்திலோ, தேவலோகத்திலோ ஒருவராலு மியலாது.

भृत्याधीनोऽहं पार्थ तेषामिष्टं ददामि च ।
तं देवोऽप्यन्यथाकर्तुं कस्समर्थोऽनुपण्डितः ॥

ஹே பார்த்த! நான் பக்தனுக்கு ஈடுபட்டவன். அவனுடைய இஷ்டத்தைய‌ளிக்கச் சித்தனுயிருக்கிறேன். தேவனுயிருப்பினும் அவன் இஷ்டத்தைத் தடுப்பதற்கு எவன் ஸமர்த்தன்?

द्वादशाब्दं सहस्राक्षो न ववर्ष तदाश्रमे ।
कृपया मम धर्मात्मन् वर्धितं तोयमुत्तमम् ॥

ஹே தர்மபுத்திரரே! இந்திரன் 12-வருஷகாலம் அந்த ஆச்ரமத்தில் ஜலத்தை வர்ஷிக்காமலிருந்தான். என்னுடைய கிருபையால் சிறந்த தோயமானது அங்கு விருத்தியடைந்தது.

ददद्दै सर्वभूतानामास्ते तत्र मम प्रियः ।

ஸகல பிராணிகளுக்கும் எப்பொழுதும் தடங்கலில்லாமல் தீர்த்தத்தைக் கொடுத்துக்கொண்டு எனக்குப் பிரியனுன ஸுசீலன் சுகமாய் வஸித்துவந்தான். இந்தமாதிரி பகவதனுக்கிரகம் ஏற்பட்டிருப்பதையறியாத தேவாதிபன் இந்த ஸமயத்தில் பரீக்ஷை செய்யக்கருதி, தேவலோகத்திலிருந்து பலபேர்களை பிராமண ரூபமாக தீர்த்ததானம் செய்யும் சுசீலருடைய ஆச்ரமத்திற்கு அனுப்பினுன். அவர்கள் வந்தவுடன் அவ் வேதியரும் அதிக பக்தியுடன் ஆராதித்து, நற்சுவைபொருந்திய சீதளமான தீர்த்தத்தைக் கொடுத்துத் திருப்தியடையும்படி செய்தார். இவ்விதம் நன்கு ஆராதிக்கப்பட்டுத் திருப்தியடைந்த விண்ணவர்கள் இந்திரனிடம் சென்று தங்களுக்குநடந்த மரியாதையையும், மற்றும் தீர்த்ததானம்நடக்கும் வைபவத்தையும்பற்றிப் புகழ்ந்து பேசினுர்கள். இதைச் செவியுற்ற தேவேசன்,

अन्यथा चिन्तितं कार्यं दैवेन कृतमन्यथा ।

என் அதிகரிக்க வேண்டு மென்று சிலர் கூறலாம். ஒவ்வொரு தேசத்திலும் ஜனத்தொகைக்குத் தகுந்தவாறு விதவைகளில்லாமற் போகவில்லை. மற்ற தேசங்களில் விதவைகள் மறுவிவாகம் செய்து கொள்வதாலும், நமது தேசத்தில் அவ்விதம் மறுவிவாகம் செய்து கொள்ளாததாலுமே நம் நாட்டில் விதவைகளதிகமெனக் கணக்கிடப்படுகிறது. விதவா மறுவிவாகமென்ற கற்புக் கழிவு கொடுக்கும் தீயச்செயலை நம் தேசத்தினர் செய்வதைக் காட்டிலும், தன்கணவனை மறுபிறப்பிலாவது அடையவேண்டுமென்று ஈசனை வழிபாடு செய்யும் விதவைகள் அதிகரித்தல் மேலானதே.

ஏழாவதாக, பால்யவிவாகத்தினுல் குழந்தைகளதி கரிப்பதால் அவர்களைப் பராமரிக்கப் போதிய பொருளில்லாததால் இந்தியாவில் ஏழ்மைத்தனம் அதிகமாகிறதெனக் கூறப்படுகிறது. இது முற்றிலும் தவறு. நம் நாட்டினர் மேநாட்டு நாகரீகத்தில் மூழ்கி, அத் தேயத்தினரைப் போல நமது நடை, உடை, பாவனைகளிருக்க வேண்டுமெனக் கருதி கண்களுக்கழகாகத் தோற்றும் அயல் நாட்டுச் சரக்குகளை ஏராளமாக வாங்கி, நம் தேயத்துப் பணத்தைக் கப்பல் கப்பலாக வெளிநாடுகளுக் கேற்றுமதி செய்வதும், குடிசைக் கைத் தொழில்களை விட்டதுமே இந்தியாவின் ஏழ்மைத் தனத்துக்குக் காரணமென நான் சொல்லாமலே நேயர்களறிவார்கள்.

எட்டாவதாக, அயல் நாட்டினர் இந்தியாவின்மேற் படையெடுத்ததற்கு பால்யவிவாகம்தான் காரணம். பால்யவிவாகத்தால் அதிக வலிமைவாய்ந்த குழந்தைகளுண்டாகாதாதலால், நம் நாட்டினர் வலியவர்களான அயல் நாட்டினரோடு நின்று எதிர்த்துப் போராட முடிகிறதில்லையெனச் சொல்லப்படுகிறது. அன்னிய தேசத்தினர் நம் நாட்டின்மீது படையெடுத்ததற்குக் காரணம் சரித்திரத்தை யாராய்ந்து பார்த்தால் புலப்படும். அலக்ஸாண்டர் என்ற கிரீஸ் தேசத்துப் போர்வீரன் இந்தியாமீது படையெடுக்கும் பொழுது நம் நாட்டுச் சிற்றரசர்கள் ஒற்றுமையில்லாமலிருந்தார்களெனச் சரித்திரம் கூறுகிறது. ஜனங்களும் 'ராமனுண்டாலென்ன, ராவணனுண்டாலென்ன, உலகமோ

அநித்தியம்' எனக்கருதி தேசிய இயக்கத்தில் ஈடுபடாமல், மத விஷயங்களிலதிகப் பற்றுதலுள்ளவர்களாக விருந்தார்கள். மாக்ஸ்முல்லர் என்ற ஐரோப்பிய கனவான் 'இந்தியாவும், அது நமக்குக் கற்பிக்கும் பாடமும்' (India, and what can it teach us) என்ற புத்தகத்தில், இந்தியாவை வேதாந்தி ஜனஸமூகம் (Nation of Philosophers) என்று வருணித்திருக்கிறார். ஆகையால் நம் நாட்டின்மேல் அன்னியநாட்டுப் படையெழுச்சிக்கு பால்யவிவாகம் காரணமாகாதெனச் சரித்திர ஆராய்ச்சி முறையில் தெரியவருகிறது.

இவ்வாறு பால்யவிவாகத் தாலுண்டாவதாகக் கருதப்பட்ட தீமைகள் வெவ்வேறு காரணங்களா லுண்டாவதாக நிரூபித்தோம். இனி பால்யவிவாகத்தினாலுண்டாகும் நன்மைகளையும், வயதான பிறகு விவாகம் செய்வதாலுண்டாகும் தீமைகளையும் சிறிது கூறுவோம்.

"Early marriage, Long love"

என்று ஆங்கிலத்திலோர் பழமொழியுண்டு. பால்யத்தில் எல்லோருடைய மனதும் மாசற்றுப்பளிங்கு போலிருக்கும். அப்பொழுது எது மனதில் பதிகிறதோ, அது பிற்காலத்தில் எப்பொழுதும் மனதனின்றுமகலாது. ஆனதுபற்றியே ஔவைபிராட்டியார்,

"இளமையிற்கல்"

என்று கூறியுள்ளார். பால்யத்தில் மாதர்களின் மனதில் எந்த ஆடவனுடைய ரூபம் பதியுமோ, அந்த ரூபத்தினிடத்தில் ஆயுட்காலம் முழுவதும் அன்பு குறையாது. வயதானபிறகு விவாகம் செய்து கொண்டால் மாசுபடிந்த மனதிலழகாகத் தோற்றும் புருஷனிடம் முதலில் அன்பு உதிக்கும். அந்த ஆடவனுடைய அழகு குறையவாரம்பிக்கும்பொழுது வேறு அழகிய புருஷனிடமன்புண்டாகும். அவனை விவாகம் செய்து கொள்வதற்காக முன் விவாகம் செய்துகொண்ட புருஷனோடு விவாகரத்து (Divorcement) செய்து கொள்ளவேண்டும். சமீபத்தில் ஜர்மனி தேசத்தில் மனைவியை மாற்றிக் கொண்ட குற்றத்திற்காக

(Exchange of wives) இருகனவான்கள் தண்டிக்கப்பட்டதாகப் பத்திரிகைகளில் பிரசுரமாகி யிருந்ததை நேயர்கள் வாசித்திருப்பார்கள். இம்மாதிரி வயதானபிறகு விவாகம் செய்வதால் பல துன்பங்கள் உண்டாகிறது மல்லாமல், வதூவரர்கள் ஒருவர் மற்றொருவரைத் தேர்ந்தெடுப்பதில் தாங்கள் செய்யும் குற்றங்களையும் கவனிக்க இயலாமலிருக்கிறார்கள். ஏன்? காதல் ஒன்றே அவர்கள் மனதில் குடிகொண்டிருப்பதுதான். ஆனது பற்றியே ஐரோப்பா காளிதாஸரான ஷேக்ஸ்பியர் Shakespeare

"But love is blind and lovers cannot see,
The pretty follies they themselves commit"

என்று "வெனிஸ்நகர வியாபாரி" (Merchant of Venice) யென்ற நாடகத்தில் கூறியுள்ளார். தவிர ஆடவர்களுக்கு உபநயநம் என்ற ஸம்ஸ்காரம்போல், மாதர்களுக்கு விவாகம் என்ற ஸம்ஸ்காரம் பெரியோர்களால் விதிக்கப்பட்டிருக்கிறது. மாதர்களுக்கு இத்தகைய ஸம்ஸ்காரத்தை பால்யத்தில் செய்வதால், அவர்கள் அக்காலத்திலேயே பதிகிருகம் சென்று மாமனார், மாமியார் முதலிய பெரியோர்களிடம் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை நன்கு அறிந்து கொள்ள முடியும். வயதானபிறகு விவாகம் செய்து கொண்டால், மாதர்கள் மாமனார் மாமியார் மனதையறிய இயலாமல் தான் தோன்றியவாறு செய்ய, அதனால் குடும்பத்தில் அநேகவிதச் சச்சரவுகளுண்டாகும், இவ்வாறு பால்யவிவாகம் செய்வதால் நன்மைகளும் வயதானபிறகு செய்வதால் தீமைகளும் உண்டாகிறபடியால் வெகுநாளாக நம் நாட்டில் வழங்கிவரும் பால்யவிவாகத்தை நாமும் செய்யலாம்.

சிரோமணி, T. V. ஸ்ரீகண்டசாஸ்திரி.
Proficient

|| श्री चित्सभेशाय मङ्गलम् ||

சிதம்பரம் அத்வைதஸபை.

இச் சபையானது 12-வருஷ காலமாக மேன்மேலும் அபி விருத்தியுடன் மஹாமஹோபாத்தியாயர் பிர்மஸ்ரீ. தண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதரவர்கள் கிருகத்தில் நடைபெற்றுவருவது யாவரு மறிந்த விஷயமே.

இதை இவ் வருஷமும் வழக்கம்போல் 31—12—24ல் ஆரம்பம்செய்து, ஒவ்வொருதினங்களிலும் உபநிஷத்பாராயணம் ஸ்ரீ பகவத்கீதாபாஷ்யத்தில் லேகன, வாசிக பரீக்ஷைகளும் மற்று முள்ள இதர சாஸ்திரங்களில் வாக்யார்த்தங்களும், சிறந்த பல உபந்யாஸங்களும் நடைபெற்றன.

ஸம்மான தினமாகிய ஸ்ரீ நடராஜமூர்த்தியினுடைய ரதோத் ஸவ தினத்தில் மகா-ா-ா-ஸ்ரீ ஸப்ஜட்ஜி. சுப்பராய அய்யரவர்கள் அக்கிராஸனத்தின்கீழ் ஓர் மஹாஸபை கூடிற்று. அதில் வேத சாஸ்திரங்களில் விசேஷப் பயிற்சிபெற்றுப் பிரஸித்தியடைந்த அனேகம் பண்டிதர்களால் வியாஸங்கள் செய்யப்பட்டும், பிறகு ஸ்ரீ மீனாக்ஷி ஸம்ஸ்கிருத காலேஜ் வித்யார்த்திகளால் ஸ்ரீ சங்கர விஜயம் என்னும் நாடகம் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டது. அப்பால், பரீக்ஷாதிகாரிகளுக்கும், பரீக்ஷையிற்றேறிய வித்யார் த்திகளுக்கும் சம்மான மளித்து, அக்கிராஸனாதிபதி யவர்கள் அந்த க்ஷேத்திரத்தினுடைய பெருமையையும், சகல வித்வான் களும் அங்கு விளங்கும் வைபவத்தையும், ஸமீபத்தில் சென்னை யில் நடந்த ஆல் இந்தியா கான்பிரன்ஸுக்கு வந்திருந்த சிறந்த பண்டிதர்களில் சிதம்பரமிருந்து வந்த பண்டிதர்களே விசேஷ மாகயிருந்த கௌரவத்தையும், ஆன்ரபில் திவான்பகதூர். கனம். ஸர். மு. அ. அண்ணாமலைச்செட்டியார் அவர்களால் ஏற்படுத்தப் பட்ட ஸ்ரீ மீனாக்ஷி ஸம்ஸ்கிருதகாலேஜியினால் ஸம்ஸ்கிருதபாஷை க்கு விசேஷாபிவிருத்தி யுண்டாகும்படி தர்ம பிரபுக்களாகிய நகரத்தார்களுக்கு ஊக்கமுண்டாகி, விசேஷ லாபம் கிடைக்கக்

கூடியனதயும் மிகவும் அற்புதமாயுபந்நியஸித்தார்கள். பிறகு, கார்யதர்சி அவர்களால் ஸபையின் ரிபோர்ட் படிக்கப்பட்டது.

இவ் வருஷத்தில் இந்த ஸபைக்கு ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களாலும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களாலும் பூர்ணனுக்கிரகத்துடன் செய்யப்பட்ட மஹோபகாரத்தால் இந்த ஸபையில் வேதாந்தசாஸ்திரத்துடன் அடுத்தவருஷம் முதல் மீமாம்ஸை, வியாகரணம் இவ் விரண்டு சாஸ்திரங்களிலும் பரீக்ஷையும், ஸம்பாவனையும் நடத்தவேண்டுமென்கிற உத்ஸாகமுமேற்பட்டிருக்கிறது. ஸபையோர்களனைவரும் ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாசார்யரவர்களே இந்த ஸபையில் பூர்ண கடாக்ஷம்வைத்திருப்பதாக பாவித்துப் பரம சந்தோஷத்தை யடைந்தார்கள். பின்னும், இவ்வருஷம் மகா-ா-ா-ஸ்ரீ டிஸ்ட்ரிக்ட் முனிசிப், தாசில்தார், மாஜிஸ்ட்ரேட் முதலான அதிகாரிகளும், கனவான்களும், பண்டிதசிகாமணிகளும் வந்து, இந்த ஸபையை கௌரவப்படுத்தியது பரம லாபமென்றும், அடுத்த வருஷத்து ஸபையில் ஸ்ரீ சங்கரபகவத்பாதாளால் செய்யப்பட்ட ஸூத்திரபாஷ்யம், பாமதி, மீமாம்ஸை, சாபரபாஷ்யம் முதல் அத்தியாயம், வியாகரணம், மஹாபாஷ்யம் முதல் அந்தியாயம் இவைகளில் பரீக்ஷைசெய்து ரூபா 60வரையில் சம்மானமளிக்கப் படுமென்பதையும் கார்யதர்சி யறிவித்தார். பிறகு சந்தனம், தாம்பூலம் வழங்கி, ஸபை பூர்த்தியடைந்தது. சுபம்.

மதாபிமானி.

இவ் வருஷத்திய

"மஹாமஹோபாத்யாய" பட்டம்

பிர்ம்ம ஸ்ரீ.

வெங்கிடசுப்ரமணிய சாஸ்திரிகளுக்கு

அளிக்கப்பட்டது.

சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலை தலைவராகவும், அத்வைத ஸபா பண்டிதருமான பிர்ம்ம ஸ்ரீ தி. வி. வெங்கிடசுப்பிரமணிய

சாஸ்திரிகளுக்கு சென்னை புஷ்பகிரி மடத்தில் அகில இந்திய கீழ் திசை மகாநாட்டிற்கு விஜயம்செய்திருந்த பண்டிதர்களால் சாஸ் திரிகளின் "மீமாம்ஸா சாஸ்திரத்தின் அபார பாண்டித்யத்தை நன்கு அறிந்து" "மீமாம்ஸா கண்டீரவ" என்ற பட்டமானது அளிக்கப்பட்டது, பண்டிதர்கள் யாவர்களாலும் சந்தோஷப் படத்தக்கதென்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை.

மேலும், "மஹாமஹோபாத்யாய" என்ற பட்டமானது பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு பல வருஷங்களுக்கு முன் னரே கொடுக்கப்பட்டிருக்கவேண்டினும் காலங் கழித்தாவது துரைத்தனத்தார் இவர்களுடைய உன்னதமானபாண்டித்யத்தை யறிந்துகொண்டு இவ் வருஷம் இப் பட்டமளித்தது சந்தோஷப் படற்குறியதே.

சாஸ்திரிகள் அவர்களுக்கு ஸகஜமாயுள்ள பலவித அரிய குணாதிசயங்களைப்பற்றியும், யோக்கியதையைப்பற்றியும் விஸ் தாரமாக நாமிங்கு குறிப்பிடவேண்டியதில்லை. ஆயினும் விசேஷ மான சில விஷயங்களை இங்கு குறிப்பிடுவோம். தென்தேசத்தில் மிகவும் கொண்டாடப்பட்டுவரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களின் ஆஸ்தானத் தில் வெகுகாலம் பிரதான பண்டிதராக இருந்துவந்திருக்கிறார் கள். லோகாந்தரமடைந்தும், தற்பொழுது கீர்த்தியினால் இவ் வுலகத்தை யலங்கரித்துக்கொண்டிருக்கும் காலஞ்சென்ற மஹா மஹோபாத்யாய ராமசுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களின் முக்ய சிஷ்யர்களுக்குள் இவர்களும் ஒருவராவார்கள். காலஞ் சென்ற ஸ்ரீமான். வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸம்ஸ்கிருத கலாசாலையில் ஆரம்பமுதல் கொண்டு உபாத்தியாய பதவியை வகித்துவந்து இப்பொழுது இக் கலாசாலையின் பிரதான ஆசிரியராகவும் இருக்கிறார்கள். 300 வருஷங்களுக்கு முன் விசேஷ ஆதரவுடன் வாசிக்கப்பட்டு வந்து தற்பொழுது மிகவும் க்ஷீணதசையை அடைந்து இருக்கும் "பூர்வ மீமாம்ஸா" சாஸ்திரமானது தென்தேசத்தில் பலராலும் தற்பொழுது கற்றுக்கொள்ளப்படுவதற்கு இவர்களே மூலபுருஷ

ராவார்கள். இப்பொழுது கல்கத்தாவிலும் காசியிலுமுள்ள ஸர்வ கலாசாலைகளில் "மீமாம்ஸா" ஆசிரியர்களாயிருக்கும் பி. ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளும், பி. ஸ்ரீ சின்னஸ்வாமி சாஸ்திரிகளும் இவர்களிடமே மீமாம்ஸா சாஸ்திரம் பயின்றவர்க ளென்பதை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. 1922-ம் வருஷத்தில் மேன்மைதங்கிய இளவரசர் சென்னைக்கு விஜயம்செய்திருந்த போது அவர்களிடமிருந்து சன்மானம்பெற்றவர்களுக்குள் நமது சாஸ்திரிகள் அவர்களும் ஒருவராவார்கள். நிற்க,

---

பண்டிதர்களுக்கு ராஜாங்க ஆதரவு.

பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு "மஹாமஹோபாத்யாய" பட்டம் இவ்வருஷ மளிக்கப்பட்டதைக் கொண்டாடுவதற்காகச் சென்ற 11—1—25ல் சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலையின் ஓர் விஸ்தாரமான தோட்டத்தில் ஓர் மஹாஸபை நடந்தது. அன்று காலேஜ் முழுவதும் மிகவும் ரம்யமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பற்பல ஊர்களிலிருந்து சாஸ்திரிகள் அவர்கள் முக்ய சிஷ்யர்களும், நண்பர்களும், சாஸ்திரிகளிடம் மிக்க ஆதரவுடனிருக்குமனேகம் கனதனவான்களும் வெகு சந்தோஷத்துடன் விஜயம்செய்து கூட்டத்தை அலங்கரித்தார்கள். சென்னை மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் அந்தரங்கஸபை அங்கத்தினரான மகா-ா-ாஸ்ரீ கனம் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் பி. ஏ., பி. எல். ஸி. ஐ. இ. அக்ராஸனம் வகித்தார்கள். மாலை சுமார் ஐந்துமணிக்கு மங்களகீதங்கள் பாடப்பட்டு, நடவடிக்கைகள் துவக்கப்பட்டன. அக்ராஸனர் ஸ்ரீமான் அய்யர் அவர்கள் முகவுரையாகப் பேசினதின் சாராம்சமாவது:— இன்று எனது ஆசிரியனும் நண்பனுமான வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களின் முன்னிலையில் நடைபெறவிருக்கு மிச் சபையில் கலந்து கொள்வதில் எனக்கிருக்கு மானந்தத்திற் களவில்லை. இவ் வருஷம் கவர்ண்மெண்டார் பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு "மஹாமஹோபாத்யாய" பட்டம் அளித்து, சாஸ்திரிகள் அவர்

களையும், இக் கலாசாலையையும், தங்களையும் கவுரவப்படுத்திக் கொண்டார்கள். சாஸ்திரிகள் அவர்கள் இப்பட்டத்திற்கு வெகு காலம் முன்னமேயே தகுதியுள்ளவர்களாக ஆகிவிட்டார்கள். ஆயினும், சாஸ்திரிகள் அவர்களுடைய குணாதிசயங்களை உடையவர்கள் தங்களை பகிரங்கப்படுத்திக்கொள்ளாததால் அவர்களை யோக்யதை இருப்பினும், கண்டுபிடித்துத் தேர்ந்தெடுப்பது கவர்ண்மெண்டாருக்குக் கடினமான கார்யமாக இருக்கிறது. நமது சாஸ்திரிகள் அவர்கள் வெளி ஆடம்பரங்களை பகிஷ்கரித்து வருவதுபோல் முன்னாளில் இத்தேசத்தில் ஒவ்வொரு பண்டிதரும் பகிஷ்கரித்துவந்திருக்கிறார்கள். இந்த ஒரு உத்தமகுணமே நமது பண்டிதர்களுக்கும், விசேஷமாய்ப் பிராமண குலத்திற்கும் ஒரு பூஷணமாகும். கவுரவத்தையும் செல்வத்தையும் வேண்டாமென்ற எண்ணத்துடன் அவைகளில் புத்தியைச் செல்லவிடாது தன்னிடம் வித்யாப்யாஸம் செய்யவரும் மாணாக்கர்களின் அஞ்ஞான இருளைப் போக்கி, நடை உடை பாவனைகளால் ஸதுபதேசம் செய்வதில் ஸதா காலங்கழித்துவரும் நமது சாஸ்திரிகள் அவர்களுக்கு இப் பட்டம் கிடைத்திருப்பது ஒரு ஆச்சரியமல்ல. நமது தென்தேசத்தவர்கள் விசேஷமாக இந் நகரத்திலிருக்கும் கனதனவான்கள் நமது சாஸ்திரிகள் அவர்களிடம் வைத்திருக்கு மாதாவிற்கும், அன்பிற்கும் நீங்களிப் பெருந்திரளாக இக்கொண்டாட்டக் கூட்டத்திற்கு விஜயம் செய்திருப்பதே போதுமான அத்தாக்ஷி என்று பேசினார்கள்.

பிறகு ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் பிர்ம ஸ்ரீ சாஸ்திரிகள் அவர்களுக்கு இச்சந்தர்பத்தில் மரியாதை செய்வதற்காக ஸ்பெஷலாய் தயாரித்து அநுக்ரஹ புரஸ்ஸரம் அனுப்பி இருந்த ரத்னங்களிழைத்த மோதிரத்தை அளிக்கையில் திவான்பகதூர் மகா ா ா ஸ்ரீ டி. ஆர். ராமச்சந்திர அய்யர் அவர்கள்பேசியதாவது நான் இக்கூட்டத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களின் பிரதிநிதியாக இருந்து பேசுகிறேன். ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு நமது சாஸ்திரிகள் அவர்களிடமிருக்கும் கவுரவத்திற்கும் அன்பிற்குமளவில்லை. நமது ஸ்வாமிகள் சாஸ்திரிகள் அவர்களின் அபாரபாண்டித்யத்தையும் குணாதிசயங்

களையும் பற்பல சமயங்களில் மிகவும் மெச்சி இருக்கிறார்கள். நான்பார்த்த மாத்திரத்தில் சாஸ்திரிகள் அவர்களிடத்தில் அபூர்வ குணமொன்று கண்டுபிடித்திருக்கிறேன். அதாவது இவர்கள் பிறருக்காக தங்கள் அபிப்ராயத்தை மாற்றுவதில்லை. இதனால் தனக்கெவ்விதமான அஸௌகர்யங்கள் ஏற்படினும் அதைபொருட் படுத்தாது இது வரையில் அவர்கள் காலங்கழித்து வந்திருக்கிறார்கள். இந்த அபூர்வகுணமும் நமது சாஸ்திரிகள் அவர்களிடமிருப்பதால் காலஞ்சென்ற வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களுக்கு இவர்களிடம் விசேஷ நன்மதிப்பு ஏற்பட்டிருந்தது. இம்மஹானை நமது கவர்ண்மெண்டாரும் நமது குருமூர்த்தி அவர்களும் பெருமைப் படுத்துவது நமக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. ஸ்ரீமான். அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் சாஸ்திரிகள் அவர்களின் சிலமுக்ய குணங்களைப் பற்றியும் சாஸ்திர பாண்டித்யத்தைப் பற்றியும் புகழ்ந்து பேசி நமது பண்டிதர்களுக்கு பொதுஜனங்கள் விசேஷ ஆதரவு காட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று பேசினார்கள்.

பிறகு மாஜிஜில்லாஜட்ஜு திவான்பகதூர் எம். ஓ. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள் பேசியதாவது இச்சந்தர்ப்பத்தில் யாரை மெச்சுவது என்று எனக்குத் தெரியவில்லை. கவர்மெண்டாரையா! அல்லது சாஸ்திர ரத்னாகரத்தையா? பட்டங்களால் மனிதர்களுக்கு கவுரவம் ஏற்பட்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன். ஆனால் இவ்வருஷத்திய ஜாப்தாவை நான் பார்த்தமட்டில் மனிதர்களால் பட்டத்திற்கு கவுரவம் ஏற்படுகிறதென்று தெரிந்து கொண்டேன். ஸ்ரீமான் சாஸ்திரிகள் அவர்களின் பரிசயபாக்யம் எனக்கு அதிகமாய் இல்லாவிடினும் இவர்களைப்பற்றி எனது நண்பர் காலஞ்சென்ற வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் வெகுவாய்ப் புகழ்ந்திருக்கிறார்கள். சரியான இடத்தில் இப் பட்டம் இவ்வருஷம் போய்ச்சேர்ந்ததைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். பிறகு மதராஸ் ஸம்ஸ்கிருத கலாசாலை அத்யாபகர்களும், மாணாக்கர்களும் சாஸ்திரிகள் அவர்களின் பாண்டித்யத்தையும், குணாதிசயத்தையும், கலாசாலை நடத்திவரும் திறமையையும் மெச்சி ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்ட

அபிநந்தன பத்ரம் உயர்ந்தபட்டில் அச்சிட்டு மதராஸ் பிரஸி டென்ஸி காலேஜ் ஸம்ஸ்கிருத உபாத்யாயரும், இக் கலாசாலை முன் மாணவராயும், அத்யாபகராயுமிருந்த பிரம்மஸ்ரீ வேதாந்த விசாரத. எஸ். கே பத்மநாப சாஸ்திரிகளால் படித்து நமது சாஸ் திரிகள் அவர்களிடம் சமர்ப்பிவிக்கப்பட்டது. தங்கள் பக்திக்கறி குறியாக சுமார் நூறு ரூபா விலைமதிப்புள்ள ஓர் அழகிய வெள்ளி பூஜைப்பெட்டியும் கலாசாலை அத்யாபகர்கள் சார்பாக சமர்ப் பித்தார்கள்.

பிறகு, "வித்வத் சிரோமணி மண்டல" த்தார்களாலும் "அமரகலாவிலாஸிநி" யார்களாலும் அபிநந்தன பத்ரங்கள் படித்துக்கொடுக்கப்பட்டன. சாஸ்திரிகள் அவர்களின் முக்ய சிஷ்யர்களில் ஒருவரான கல்கத்தா ஸர்வகலாசாலை "மீமாம்ஸா" உபன்யாஸகரான பிரம்மஸ்ரீ என். எஸ். அனந்தகிருஷ்ணசாஸ்திரி கள் அவர்கள் அனுப்பியிருந்த "தங்களம்" சாஸ்திரிகள் அவர் களுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது. பிறகு சென்னை இலாகா ஸம்ஸ் கிருத காலேஜ் ஸ்கூல் ஸூப்ரெண்டெண்டு மகா-ா-ா-ஸ்ரீ பி. பி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் எம். ஏ. அவர்கள் பேசுகையில் 1918-ம் வருஷம் முதல் என்னதிகார தோரணையிலும், மற்ற சமயங்களிலும் நான் பார்த்தமட்டில் இக்கலாசாலை வெகுதிறமை யுடன் வேலைசெய்வதற்குக் காரணம் நமது "மஹாமஹோபாத் யாய" சாஸ்திரிகளவர்களே என்று நானறிவேன். இவர்கள் தென்தேசமாத்திரமல்ல, மற்ற இடங்களிலும் மீமாம்ஸா சாஸ்தி ரம் பரவுவதற்கு முக்ய காரணமாய் இருந்திருக்கிறார்கள். இவர் கள் கார்யநிர்வாக ஸாமர்த்தியத்தைப்பற்றி ஒரு விஷயம் மாத்தி ரம் சொல்லி நான் முடித்துவிடுகிறேன். அதாவது, ஸமீபத்தில் சென்னையில் நடந்த அகில இந்தியா கீழ்திசை மகாநாடு சம்பந்த மான வித்வத்பரிஷத் ஒன்று இக் கலாசாலையில் நடைபெற்றது. பண்டிதர்கள் ஒன்றுசேர்ந்தால் சண்டைகளும் கூக்குரல்களும் ஏற்படுவதுண்டென்று நான் கேட்டதுண்டு. நான்மேற்சொன்ன பரிஷத்துக்கு த்ரிமதஸ்தர்களும் பற்பல ஊர்களிலிருந்து விஜயம் செய்திருந்தாலும். அனேக சாஸ்திரங்களில் வாக்யார்த்தங்கள்

பரஸ்பரம் நடந்தபோதிலும் எவருக்கும் யாதொரு மனஸ்தாப மில்லாமலும், பொது ஜனங்களும் அது விஷயத்தில் திருப்தியாகக் கொண்டாடும்படி வெகு விமரிசையாய் பரிஷத்து நடைபெற்றதற்குக் காரணம் நமது சாஸ்திரிகள் அவர்களென்று நான் திண்ணமாய்ச் சொல்லுவேன். பிறகு பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் வந்தனோபசாரம் சொல்லி, சபை கலைந்தவுடன் வித்யார்த்திகள் ஊர்வலத்துடன் விடுதிக்கு சாஸ்திரிகள் அவர்களை அழைத்துச் சேர்ப்பித்தார்கள்.

ஜி. கே. ராமசுப்பிரமணிய சாஸ்திரி.

ஸரியான ஹிந்துஸபை.

"ஹிந்துஸபை"யின் உத்தேசததைப்பற்றி ஸ்ரீயுத "லாலாஜி" அறிவித்த விஷயங்களின்மேல் திருவனந்தபுரம் மாஜிதிவான் பேஷ்காராகிய கனம் ஸ்ரீ N. சுப்ரமண்ய அய்யாவர்கள் சில புதிய ப்ரச்னங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவை அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உரியன. இதர ஸமூஹத்தார் தமது ஸமூஹவிஷயங்களில் கருத்தைச் செலுத்தி வேலைசெய்வதுபோல் ப்ராஹ்மணர்கள் கவனித்துச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யாமையால் வந்த அநர்த்தம்—வருகின்ற சங்கடம்—வரப்போகின்ற அநர்த்த பாரம்பரை—குறைந்ததன்று! கனம் சுப்ரஹ்மண்ய அய்யாவர்கள் ஆங்கில வைத்ய நிபுணர்; உயர்தரப் பட்டம் பெற்றவர்; ஒரு கௌரவமுள்ள சுதேச ஸமஸ்தானத்தில் திவான் பேஷ்கார் பதவியும் பெற்றுத் தற்காலம் உபகாரச் சம்பளம் பெற்று வருபவர் அத்தகைய மேதாவிகளின் அபிப்பிராயங்களை எல்லோரும் கவனித்து உரியவாறு வர்ணாச்ரம விஷயங்களையும் உள்ளடக்கிய ஹிந்துஸபை யொன்றை ஸ்தாபித்தல் சக்திமத்தான கார்யமாகும்.

ஜ்ஞாநகீஜாரி: